<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 38/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திர சேகரன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

<u>**முதல் விசாரணை**</u>

நான் உடுமலை மதியழகன் ரோட்டில் வசித்து வருகிறேன். பிளக்ஸ் போர்டு தயாரிக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் சொஸ்த்ரா துணிக்கடை திறப்பு விழாவிற்காக விளம்பரம் செய்ய பிளக்ஸ் போர்டு வைத்த போது தவறி கீழே விழுந்து விட்டது. அதில் எனக்கும் சௌந்தர்ராஜன் என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டது. காயத்திற்காக உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் வந்து விசாரித்தனர். அப்பொழுது அருகில் ஆஜர் எதிரிகளும் விக்னேஷ் என்ற எதிரியும் அங்கு இருந்தனர் என்று பெயரை மட்டும் குறிப்பிட்டு சொன்னன பெயரை மட்டும் குறிப்பிட்டு சொன்னேன் போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதினார்கள் என்று தெரியாது.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.வேறு எந்த சம்பவமும் நடக்கவில்லை

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த 17.09.20217 ம் தேதியன்று** சொஸ்த்ரா துணிக்கடை திறப்பு விழா விளம்பரத்திற்காக பிளக்ஸபோர்டு வைத்தேன் என்றும், அந்த பிளக்ஸ் போர்டில் அந்த சமயத்தில் மடத்துக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புகைப்படமும் இருந்தது அதை பார்த்த ஆஜர் எதிரிகள் அங்கு வந்து யார் இந்த புகைப்படத்தை போட சொன்னார்கள் என்று எங்களை தகாத வார்த்தைகளால் திட்டு இரும்புராடால் எங்கள் இருவரையும் தாக்கினார்கள் என்றும் அதனால் எனக்கு வலது கை முட்டிகளும் சௌந்தரராஜனுக்கு தலையிலும் காயம் ஏற்பட்டது என்றும் போலிசார் விசாரணையிலும் புகார் வாக்குமூலம் கொடுத்து விட்டும் தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவர்களை இந்த வழககில் இருந்து தப்பிவிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 38/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தர்ராஜன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.02.2026.

**முதல் விசாரணை**

நான் உடுமலை மதியழகன் ரோட்டில் வசித்து வருகிறேன். அசா.1 ன் பிளக்ஸ் போர்டு தயாரிக்கும் கடையில் உடன் வேலை செய்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் சொஸ்த்ரா துணிக்கடை திறப்பு விழாவிற்காக விளம்பரம் செய்ய பிளக்ஸ் போர்டு வைத்த போது தவறி கீழே விழுந்து விட்டது. அதில் எனக்கும் சௌந்தர்ராஜன் என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் வந்து விசாரித்தனர். அப்பொழுது அருகில் ஆஜர் எதிரிகளும், விக்னேஷ் என்ற எதிரியும் அங்கு இருந்தனர் என்று பெயரை மட்டும் குறிப்பிட்டு சொன்னேன். வேறு எந்த சம்பவமும் நடக்கவில்லை

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த 17.09.20217 ம் தேதியன்று** சொஸ்த்ரா துணிக்கடை திறப்பு விழா விளம்பரத்திற்காக பிளக்ஸபோர்டு வைக்க சென்றோம் என்றும், அந்த பிளக்ஸ் போர்டில் அந்த சமயத்தில் மடத்துக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புகைப்படமும் இருந்தது அதை பார்த்த ஆஜர் எதிரிகள் அங்கு வந்து யார் இந்த புகைப்படத்தை போட சொன்னார்கள் என்றும், எங்களை தகாத வார்த்தைகளால் திட்டு இரும்புராடால் எங்கள் இருவரையும் தாக்கினார்கள் என்றும் அதனால் அசா.1 க்கு வலது கை முட்டிகளும் எனக்கு தலையிலும் காயம் ஏற்பட்டது என்றும் போலிசார் விசாரணையிலும் சொல்லி விட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை இந்த வழககில் இருந்து தப்பிவிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.